SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் ஐப்பசி 27
ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 10

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● புதன்கிழமை, நவம்பர் 13, 2024 ● வெளியூர்: 14-11-2024, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 126 ● 6 பக்கம் ● ரூ.6

# ஜார்க்கண்ட் மாநில

# சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கியது

## 11 மணி வரை 29.3 சதவீதம் வாக்கு பதிவு



**ஜார்க்கண்ட், நவ. 13-**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள 81 சட்டமன்ற தொகுதிகளில் முதற்கட்டமாக 43 தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

காலை 9 மணி வரை 43 சட்டமன்ற தொகுதிகளில் 13 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். சிம்தேகா தொகுதியில் அதிகபட்சமாக 15.09 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. ராஞ்சியில் 12.06 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. சேரைகேலாகர்சவான் தொகுதியில் 14.62 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில் 11 மணி வரை 29.3 சதவீதம் வாக்குகள் பதிவானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ராஞ்சியில் உள்ள ஏடிஐ வாக்கு மையத்தில் ஆளுநர் சந்தோஷ் குமார் கங்வார் வாக்களித்தார்.

43 தொகுதிகளில் மொத்தம் 683 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். முன்னாள் முதல்வர் சம்பாய் சோரன் மற்றும் முன்னாள் எம்.பி. கீதா கோரா ஆகியோர் களத்தில் உள்ளனர். 683 வேட்பாளர்களில் 609 பேர் ஆண்கள். 73 பேர் பெண்கள், 3 பேர் மாற்று பாலினத்தினர். 43 தொகுகளில் 17 பொதுத்தொகுதியாகும். 20 பழங்குடியினர் தொகுதியாகும். 6 எஸ்.சி. தொகுதியாகும். 1.37 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க 15,344 வாக்கு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 43 தொகுதிகளில் 1.37 கோடி வாக்காகளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

## குறைந்த காற்றழுத்தம் தமிழகத்தை நெருங்குகிறது 17 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு



**சென்னை, நவ. 13-**

வங்கக்கடலில் நேற்று முன்தினம் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அது வடக்கு மற்றும் வடமேற்கு திசை நோக்கி மெல்ல நகர்ந்தபடி உள்ளது. இந்த புதிய காற்றழுத்தம் காரணமாக தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மேலும் விறுவிறுப்பு அடைந்துள்ளது. கடந்த 3 தினங்களாக தமிழக கடலோர மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது.

காற்றழுத்த தாழ்வு பகுதி சற்று வலுவடைந்ததால் நேற்று சில மாவட்டங்களில் கனமழை பெய்தது. இந்த நிலையில் வங்கக்கடலில் நிலைக் கொண்டிருக்கும் காற்றழுத்த தாழ்வு பகுதி மெல்ல மெல்ல நகர்ந்து மேலும் மேற்கு திசைக்கு வந்துள்ளது.

இன்று (புதன்கிழமை) காலை நிலவரப்படி அந்த புதிய காற்றழுத்தம் வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் இருந்து வடமேற்கு பகுதி நோக்கி நகர்வதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. இதன் காரணமாக இன்றும், நாளையும் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து கன மழை பெய்யும் என்று இந்தியா வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு பகுதி தமிழகத்தை நெருங்க நெருங்க உள் மாவட்டங்களிலும் கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. வெள்ளிக்கிழமை காலை பரவலாக லேசானது முதல் கனமழை வரை பெய்யும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வங்கக்கடலில் தற்போது இருக்கும் காற்றழுத்த தாழ்வு பகுதி புயலாக மாற வாய்ப்பு இல்லை. அது தற்போதைய நிலையில் கரையை நெருங்கி கடக்கும். பிறகு வலு குறையும் என்று தெரிய வந்துள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுப்பெறாவிட்டாலும் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து நல்ல மழை பொழிவு தரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இன்று 17 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை, நாளை மறுநாள் 25 மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சில மாவட்டங்களில் 16ந்தேதி (சனிக்கிழமை) வரை மழை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் நேற்று இரவு சில இடங்களில் லேசான மழை பெய்தது. மிக கனமழை எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சென்னையில் சில இடங்களில் மட்டும் சிறிது நேரம் கனமழை பெய்தது. இன்று காலை முதல் சென்னையில் மேக மூட்டம் காணப்படுகிறது.

அடுத்த 2 நாட்களுக்கு சென்னையில் இதே நிலை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் இன்று சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்து இருக்கிறது. இன்று (புதன்கிழமை) சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்டத்தில் கனமழையும், ராணிப்பேட்டை, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி, நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

## அரசுப் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசு

**சென்னை, நவ. 13-**

இது தொடர்பாக அரசு போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வழக்கமான மாதாந்திர குலுக்கல் முறைப்படி நவம்பர் மாதம் முதல், வாரத்தின் அனைத்து நாட்களிலும் பயணம் செய்ய முன்பதிவு செய்யும் அனைத்து பயணச்சீட்டுகளும் மாதாந்திர குலுக்கல் முறைக்குத் தகுதி பெறும். ஒவ்வொரு மாதமும் 13 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அதன்படி முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு தலா ரூ. 10 ஆயிரம் வழங்கப்படும். மற்ற 10 வெற்றியாளர்களுக்கு தலா ரூ. 2 ஆயிரம் வழங்கப்படும். இந்நிலையில் சிறப்பு குலுக்கல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஓ.டி.ஆர்.எஸ் (ளிஜிஸிஷி) இன் கீழ் முன்பதிவை ஊக்குவிக்கும் வகையில், முன்பதிவு செய்யும் பயணிகளுக்கு மூன்று அற்புதமான உயர் மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படும். இது 2024 நவம்பர் 21 முதல் 2025 ஜனவரி 20 வரை வாரத்தின் அனைத்து நாட்களிலும் பயணம் செய்யப்படும் அனைத்து முன்பதிவுகளும் இச்சிறப்பு குலுக்கல் முறைக்குத் தகுதி பெறும்.

இந்த சிறப்பு குலுக்கல் பரிசுகள், 2025ஆம் ஆண்டு பொங்கலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டு பயணிகளுக்கு வழங்கப்படும். அந்த வகையில் முதல் பரிசு இரண்டு சக்கர வாகனம் ஆகும், இரண்டாவது பரிசு எல்.இ.டி (லிணிஞி) ஸ்மார்ட் தொலைக்காட்சிப் பெட்டி மூன்றாவது பரிசு குளிர்சாதனப் பெட்டி ஆகும். எனவே பொதுமக்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் மூலம் பயணம் செய்ய முன்பதிவு செய்து, கடைசி நேர சிரமங்களைத் தவிர்த்து எளிதாகப் பயணம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உழவர் சந்தை செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



கடலூர் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநகராட்சி ஆணையாளர் அனு, துணை இயக்குநர் வேளாண் வணிகம் பூங்கோதை.

## கிண்டி மருத்துவமனையில் டாக்டருக்கு கத்திக்குத்து

**கிண்டி, நவ. 13-**

சென்னை கிண்டியில் கலைஞர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில், புற்றுநோய் துறையில் பாலாஜி ஜெகன்நாதன் என்பவர் டாக்டராகவேலை பார்த்து வருகிறார். இந்நிலையில், தாய்க்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என கூறி, டாக்டர் பாலா ஜியை வடமாநில இளைஞர் விக்னேஷ் உள்பட 4 பேர் கத்தியால் குத்திய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கத்தியால் குத்தப்பட்ட டாக்டர் பாலாஜி படுகாயங்களுடன் அதே மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார். அவரது நெஞ்சில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தகவலறிந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் ஒருவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறது. இந்த சம்பவத்தை தொடர்ந்து கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• புதன் • நவம்பர் 13, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆலோசனைக்கூட்டம்



வேலூர் மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் பிரகாஷ் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்தையன், மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன்.

# ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவைத்தொகை வழங்கல்




திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் "ஸ்பார்ஷ் அவுட்ரீச்" திட்டத்தின் கீழ் முன்னாள் படைவீரர்களின் ஓய்வூதியக் குறைகளைக் களைவது தொடர்பான விழிப்புணர்வு முகாமில் ஓய்வூதிய நிலுவைத்தொகைக்கான காசோலையை ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கினார்கள். உடன் மாநகர காவல் துணை ஆணையர் கிரிஷ் யாதவ்.

# ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை திறந்து வைத்த முதல்வர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்தினை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் குத்து விளக்கேற்றி வைத்தார்கள். உடன் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்.

# விதைப்பந்து தயாரிக்கும் பயிற்சி



புதுச்சேரி, நவ. 13-

புதுவை நாவாலர் நெடுஞ்செழியன் மேல் நிலைப் பள்ளியில் விதைப் பந்து தயாரிக்கும் முயற்சியினை பள்ளி NSS பொறுப்பு ஆசிரியை சுபாஷினி தலைமையில் மாணவர்கள் செய்திருந்தார்கள். மாணவர்கள் செய்த விதைப்பந்து 1000த்தை பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சாரி டேபிள் சொசைட்டி தன்னார்வளர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியை ஆர்பிட்டா தாஸ் தலைமையில் ஆசிரியர்கள் ஜாக்குலின், குமாரவேல், பரூக், ரத்தினவேல், வீராசாமி ஆகியோர் பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சரிடெபுள் சொசைட்டி தன்னார்வலர்கள் பூரணாங்குப்பம் பனை ஆனந்தன் தலைமையில், டோன்ட் வேஸ்ட் புட் ஸ்டீபன் ராயப்பா, சமூகம் சரவணன், ராணி அறக்கட்டளை விஜய், விமல் ஆகியோரிடம் விதைப்பந்துகளை புதுவை முழுவதும் தூவ ஒப்படைக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பள்ளி NSS மாணவர்கள் பங்கு பெற்றனர்.

# 20ம் தேதி தி.மு.க. உயர்நிலை செயல்திட்ட குழு கூட்டம்

சென்னை, நவ. 13-

தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. உயர்நிலை செயல்திட்ட குழு கூட்டம் வருகிற 2011 2024 புதன்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

அப்போது உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் விழிப்புணர்வு பேரணி



கடலூர் டவுன்ஹால் அருகே 100 சதவீதம் வாக்குப்பதிவினை முன்னெடுக்கும் விதமாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவர்கள் பங்கேற்புடன் கூடிய வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

# ஊராட்சி ஒன்றிய அலுவலகம் திறப்பு






தமிழ்நாடு முதலமைச்சர் தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள், அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா கலந்துகொண்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை.

# 'காபி வித் கலெக்டர்' நிகழ்ச்சி



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க ஓசூர் மண்டலம் சார்பாக "Coffee with Collector" (காபி வித் கலெக்டர்) என்னும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு, தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட தொழில் மைய மேலாளர் பிரசன்ன பாலமுருகன்.

# மாட்டம்மை நோய் சிகிச்சை தடுப்பூசி பணி



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா திருச்செங்கோடு வட்டம், தோக்கவாடியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் மாட்டம்மை நோய் சிகிச்சை தடுப்பூசி பணி மற்றும் விழிப்புணர்வு சிறப்பு முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# பகுதிநேர ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




திருப்பத்தூர், நவ. 13-

தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடந்து வரும் நிலையில் பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் பணி நிரந்தரம் செய்ய கோரி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளித்தனர்.

திருப்பத்தூர் மாவட்ட பகுதிநேர ஆசிரியர் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் பணி நிரந்தரம் செய்யக் கோரி திருப்பத்தூர் பாரத ஸ்டேட் வங்கி எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் இர. முரளிதரன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சா.ஹரி அனைவரையும் வரவேற்றார். மாவட்ட பொருளாளர் திருநாவுக்கரசு கண்டன உரையில் நோக்கங்களை எடுத்து கூறினார்.

ஆர்ப்பாட்டத்தின் போது கடந்த 2011- 2012 கல்வியாண்டில் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 12000 பகுதி நேர ஆசிரியர்கள் திருப்பத்தூர் மாவட்டத்தில் மட்டும் 216 பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அரசு பள்ளி மாணவர்களின் பன்முக திறன்களை மேம்படுத்தும் பொருட்டு ரூபாய் 12,500 ஊதியத்தில் 13 ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றனர். இதுவரையில் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என கோஷங்களை எழுப்பியதோடு, தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் 2016 வ.எண்.191 மற்றும் 192 மற்றும் 2021 இல் வ.எண்:181 இல் பகுதி நேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி தர வேண்டும் என்று கூறினார்கள். இந்நிலையில் கடந்த 13 ஆண்டுகளாக பணி நிரந்தர கோரிக்கை நிறைவேறாமல் உள்ளமையால் 12000 மேற்பட்ட அரசு பள்ளி பகுதிநேர ஆசிரியர்களின் குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், வயது மூப்பின் அடிப்படையிலும் விரைவில் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை முழக்கத்தினை எழுப்பினார்கள். பணி நிரந்தரம் அறிவிப்பு செய்யப்படாத நிலையில் 12000 பகுதி நேர ஆசிரியர்களும் சென்னையில் கோட்டை முற்றுகை போராட்டம் செய்து அரசின் கவனத்தை பெற்று பணி நிறைவு கோரிக்கை நிறைவேற்ற முயல்வோம் என்று கூறினார்கள். இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தினை முடித்துக் கொண்டு அதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மனுவினை அழித்து வரும் நிலையில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நேரடியாக நேரடியாக மனுவினை அளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் துணைத் செயலாளர் நி. ஸ்ரீனிவாசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் மாதனூர் ஒன்றியம் கோவிந்தராஜ், ஆலங்காயம் ஒன்றியம் ஜனார்த்தனன், நாட்றம்பள்ளி ஒன்றியம் ஜெய் திருமால், கஜேந்திரன், ஜோலார்பேட்டை ஒன்றியம் செந்தில்குமார், திருப்பத்தூர் ஒன்றியம் கீதா, அறிவு மணி என 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# லாஸ்பேட்டை மருத்துவமனையில் கலெக்டர் குலோத்துங்கன் ஆய்வு



புதுச்சேரி, நவ. 13-

லாஸ்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில், புகையிலை நிறுத்தும் சிகிச்சை பிரிவை கலெக்டர் குலோத்துங்கன் திறந்து வைத்து, ஆய்வு செய்தார்.

லாஸ்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புகையிலை நிறுத்தும் சிகிச்சை பிரிவை கலெக்டர் குலோத்துங்கன் நேற்று திறந்து வைத்தார். தொடர்ந்து, மருத்துவமனையை ஆய்வு செய்த கலெக்டர், வெளிப்புற சிகிச்சை, தொடர் நோய் சிகிச்சை பிரிவுகள் மற்றும் நாய்க்கடி நோயாளிகளின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்தார்.

ஆஷா பணியாளர்களிடம் மருத்துவ காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தை பெற்ற தாய்மார்களின் எண்ணிக்கை தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டார். சுகாதாரத்துறை இயக்குனர் செவ்வேல், என்.டி.சி.பி., மாநில நோடல் அதிகாரி டாக்டர் வெங்கடேஷ், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி கம்யூனிட்டி மெடிசின் துறைத் தலைவர் டாக்டர் கவிதா வாசுதேவன், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி பொது சுகாதார நோடல் அதிகாரி டாக்டர் ஆனந்தராஜ் ஆகியோர் பங்கேற்றனர். லாஸ்பேட்டை தலைமை மருத்துவர் நளினி மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## காரைக்காலில் திடீர் ஆய்வு

# அதிக சத்தம் எழுப்பிய ஹாரன்களை பறிமுதல் செய்த போக்குவரத்து அதிகாரி



காரைக்கால், நவ. 13-

காரைக்காலில் வாகனங்களில் அதிக சத்தம் எழுப்பும் ஹாரன் இருப்பதாக வந்த புகாரின் பேரில் போக்குவரத்து துறை அதிகாரி ஆய்வு செய்தார்.

காரைக்காலில், கனரக வாகனம் மற்றும் ஆட்டோ, வேன், லாரிகள் அதிவேகமாக செல்வதால், பொதுமக்கள் பெர் உம் இன்னலுக்கு ஆளாகி வருவதாக எழுந்த புகாரையடுத்து, மாவட்ட கலெக்டர் மணிகண்டன் உத்தரவின்பேரில், மாவட்ட மண்டல போக்குவரத்து துறை சார்பாக, காரைக்காலிம் நகர் பகுதி மற்றும் தேசிய நெடுஞ்சாலை பகுதிகளில், மண்டல போக்குவரத்து அதிகாரி பிரபாகர ராவ் தலைமையில், அதிகாரிகள் நேற்று திடீர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். வாகன சோதனையில், வேக கட்டுப்பாட்டு கருவி, மாசு கட்டுப்பாடு சான்றிதழ், அதிக ஒலி எழுப்பும் ஹாறன், அதி வேகமாக செல்லும் வாகனங்கள், ஜிபிஎஸ் கருவி மற்றும் உரிய ஆவணங்கள் உள்ளனவா என பரிசோதனை செய்யப்பட்டது.

மேலும், உரிய ஆணை, ஆவணம், உரிமம் இல்லாமல் இயக்கப்பட்ட 2 சரக்கு வாகனம், கட்டன மீட்டர் இல்லாமல் இயக்கப்பட்ட 3 ஆட்டோக்கள் மற்றும் ஒரு நாகலாந்து மாநில ஆம்னி பேருந்து உரிமையாளர்களுக்கு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, அபராத தொகையை கட்டுமாறு போக்குவரத்து அதிகாரி பிரபாகராவ் உத்தரவிட்டார். இந்நிகழ்வில் உதவி மோட்டார் வாகன ஆய்வாளர் தட்சிணாமூர்த்தி மற்றும் ஊழியர்கள் வாகன சோதனையில் ஈடுபட்டனர். சோதனையின் ஒரு பகுதியாக அதிக சத்தம் எழுப்பும் வாகனங்கள் வைத்திருந்த உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்து ஹாரன்களை பறிமுதல் செய்தனர்.

# வில்லியனூர் கரையான்பேட்டில் தார் சாலை அமைக்கும் பணி எதிர்க்கட்சித் தலைவர் சிவா துவக்கி வைத்தார்



புதுச்சேரி, நவ. 13-

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரையான்பேட் ரோடு அன்னை நகரில் உள்ள உட்புற சாலைகளுக்கு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூபாய் 26 லட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் தார்ச்சாலையுடன் கூடிய பக்கவாட்டு கழிவுநீர் வாய்க்கால் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்கட்சி தலைவரும், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான சிவா கலந்துகொண்டு சாலை அமைக்கும் பணியை பூஜை செய்து துவக்கி வைத்தார். இதில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, ஊர் முக்கியஸ்தர்கள் மந்திரிகுமார், சபரியப்பன், ஜெரோம், லாரன்ஸ், ஜோசப் ராஜி, ஜூலியஸ், கிருஷ்ணராஜ், கமல்ராஜ், பாண்டியன் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வநாதன், தர்மராஜ், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், தொமுச தலைவர் அங்காளன், ஆதிதிராவிட அணி தலைவர் பழனிசாமி, தொகுதி துணை செயலாளர் அரிகிருஷ்ணன் மற்றும் அன்பு என்கின்ற அன்பழகன், தங்கராசு, அன்புநிதி, அபிமன்னன், நடராஜன், வேல்முருகன், வீரமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உலக சுனாமி விழிப்புணர்வு தினம் அனுசரிப்பு



சிதம்பரம், நவ. 13-

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடல் அறிவியல் புலம், கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவகால மாற்ற அமைச்சகம், புது தில்லி நிதி உதவியுடன் இயங்கிவரும் சுற்றுச்சூழல் தகவல், விழிப்புணர்வு, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார திட்ட மையம் உலக சுனாமி விழிப்புணர்வு தினம் அரசு உயர்நிலைப்பள்ளி, முடசல் ஓடையில் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ஆர்.எம். கதிரேசன் மற்றும் பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் முனைவர் எம். பிரகாஷ் அவர்களின் வழிகாட்டுதலின் படி இவ்விழா நடைபெற்றது. மெஹருன்னிசா, தலைமையாசிரியை (பொறுப்பு), அரசு உயர்நிலைப் பள்ளி, முடசல் ஓடை வரவேற்புரை வழங்கினார். பேராசிரியர் முனைவர் பெ. சௌவுந்திரபாண்டியன், புலமுதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர், கடல் அறிவியல் புலம் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சுனாமி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது (டிசம்பர், 2015) ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 5ஆம் தேதியை "உலக சுனாமி விழிப்புணர்வு தினமாக" அனுசரிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார். இத் தினத்தை முன்னிட்டு சுனாமி விழிப்புணர்வு பிரசுரத்தை வெளியிட்டு பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், முனைவர். லெனின், திட்ட அலுவலர் விளக்க காட்சி மூலம் சுனாமி பேரழிவுகளின்போது நாம் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி விரிவாக மாணவர்களுக்கு விளக்கினார். இந்நிகழ்ச்சியில் 120க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். இறுதியாக, முனைவர் லெனின், திட்ட அலுவலர், நன்றியுரையாற்றினார். சுற்றுச்சூழல் தகவல் மைய ஊழியர்களான, முனைவர் லெனின், விஜயலட்சுமி, செந்தில்குமார், சுப்பிரமணியன் மற்றும் நாகராஜன் மற்றும் தலைமை ஆசிரியர் சிவகுமார், முடசல் ஓடை ஆகியோர் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

# உலக நிமோனியா தினம் அனுசரிப்பு



புதுக்கோட்டை, நவ. 13-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் வானவில் மன்றம் சார்பில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் உலக நிமோனியா தினம் அனுசரிக்கப்பட்டது. நிகழ்வின் கந்தர்வகோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் வட்டாரச் செயலாளரும், பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா உலக நிமோனியா தினம் குறித்து பேசும்பொழுது, உலக நிமோனியா தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 12 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. நிமோனியா என்பது அல்வியோலி எனப்படும் நுரையீரலின் காற்றுப் பைகளை பாதிக்கும் பாக்டீரியா, வைரஸ்கள் அல்லது பூஞ்சை தொற்றுகளால் ஏற்படும் அழற்சி சுவாசக் கோளாறு ஆகும்.

இந்த ஆண்டு, 2024, உலக நிமோனியா தினத்தின் கருப்பொருள் ஒவ்வொரு சுவாசமும் நிமோனியாவை அதன் பாதையில் நிறுத்து என்பதாகும். கரும் பொருள் ஒவ்வொரு சுவாசத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. மற்றும் ஆரம்பகால கண்டறிதல், சிகிச்சை மற்றும் தடுப்பு மூலம் நிமோனியாவை நிறுத்துவதற்கான அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மேலும் நிமோனியா நோயினால் ஏற்படும் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி, ஆசிரியர்கள் மணிமேகலை, சிந்தியா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# சர்வீஸ் பிளேஸ்மெண்டில் உள்ள செவிலிய அதிகாரிகள் பணிக்கு திரும்பாவிட்டால் சம்பளம் நிறுத்தம்-சுகாதாரத்துறை சிறப்பு அதிகாரி உத்தரவு

புதுச்சேரி, நவ. 13-

சர்வீஸ் பிளேஸ்மெண்டில் சென்ற செவிலியர் அதிகாரிகள் தங்களின் நியமன இடத்திற்கு திரும்பவில்லை எனில் சம்பளம் நிறுத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

சுகாதாரத் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் அமைச்சர், எம்.எல்.ஏ.,க்கள் சிபாரிசு மூலம் தங்கள் வசிக்கும் பகுதி அல்லது பணி சுமை இல்லாத இடங்களுக்கு சர்வீஸ் பிளேஸ்மெண்டில் சென்று விடுகின்றனர்.

இதனால் ஆளே வராத ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 பேர் பணி செய்ய வேண்டிய இடத்தில் 12 செவிலியர்கள் என குவிந்து விடுகின்றனர்.

இதனால் நோயாளிகள் குவியும் அரசு மருத்துவமனை உள்ளிட்டவையில் செவிலியர், மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறையால் மற்ற ஊழியர்களுக்கு பணி சுமை ஏற்படுகிறது. தரமான மருத்துவ சிகிச்சையும் கிடைப்பதில்லை.

இதனால், சர்வீஸ் பிளேஸ்மெண்டில் சென்ற 35 செவிலியர் அதிகாரிகள் தங்களின் நியமன இடத்திற்கு திரும்ப கடந்த அக்டோபர் மாதம் சுகாதாரத்துறை சிறப்பு அதிகாரி மேரி ஜோஸ்பின் சித்ரா உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை ஏற்காமல் பல செவிலியர் அதிகாரிகள் தங்களின் நியமன இடத்திற்கு திரும்பவில்லை.

இதனால் இன்றுக்குள் சர்வீஸ் பிளேஸ்மெண்டில் சென்ற செவிலியர் அதிகாரிகள் தங்களின் நியமன இடத்திற்கு திரும்பவில்லை எனில் அவர்களின் சம்பளம் நிறுத்தி வைக்கப்படும் என, சுகாதாரத் துறை சிறப்பு அதிகாரி மேரி ஜோஸ்பின் சித்ரா உத்தரவிட்டுள்ளார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• புதன் • நவம்பர் 13, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# கராத்தே போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா



**சேலம், நவ. 13–**

சேலம் ராமகிருஷ்ணா சாலையில் அமைந்துள்ள குளூனி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கராத்தே போட்டியில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதில் சர்வதேச அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி இரண்டு நாட்கள் கோவாவில் நடைபெற்றது. இந்த போட்டியில் பல்வேறு பகுதிகளில் இருந்து மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். குறிப்பாக சேலத்தில் இருந்து குளூனி ஸ்ரீ சாரதா மெட்ரிக். செயின்ட் ஜோசப் உள்ளிட்ட பள்ளிகளில் இருந்து 41 பேர் பங்கேற்றனர். சர்வதேச அளவிலான கராத்தே போட்டியில் சேலத்தை சேர்ந்த மாணவ, மாணவிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றனர். இதில் 34 தங்கம், 28 வெள்ளி, 20 வெண்கலம் ஆகிய பதக்கங்கள் பெற்று சாதனை படைத்தனர். சாதனை படைத்து தாயகம் திரும்பிய மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. சேலம் ராமகிருஷ்ணா சாலையில் உள்ள குளூனி பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு பள்ளிகளின் தாளாளர்கள் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தனர். இதில் கராத்தே பயிற்சியாளர் விச்சு மணி, அருண்பிரபு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சாலையோர மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு முதலமைச்சரை சந்தித்து நேரு எம்எல்ஏ கோரிக்கை



**புதுச்சேரி, நவ. 13–**

புதுச்சேரி சாலையோர மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு வழங்ககோரி நேரு எம்.எல்.ஏ., முதலமைச்சரை சந்தித்து கோரிக்கை வைத்தார்.

சட்டசபை வளாகத்தில் முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்த, நேரு எம்.எல்.ஏ., புதுச்சேரி ரெட்டியார்பாளையம், லேம்பர்ட் சரவணன் நகரில் புதிதாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது. அதன் கட்டுமான பணிகள் முடிவடைந்துள்ளது.

எனவே, அப்பகுதியில் புதுச்சேரி நகரப்பகுதி சாலையோரம் வசித்து வரும் வீடற்ற ஏழை மக்களுக்கு குடியிருப்புகளை வழங்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

# உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ரூ.2.50 கோடி கடன் உதவி - மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்



**செஞ்சி, நவ. 13–**

விழுப்புரம் மாவட்டநிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் மாபெரும் கல்வி கடன் முகாம் நிகழ்ச்சி செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ரங்க பூபதி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ரங்க பூபதி கல்வி குழும செயலாளர் ஸ்ரீபதி முன்னிலை வகித்தார். மாவட்டம் முன்னோடி வங்கி மேலாளர் ராஜேஸ்வரன் அனைவரையும் வரவேற்றார். இந்தியன் வங்கியின் புதுச்சேரி மண்டல மேலாளர் வெங்கடசுப்பிர மணியன் உயர் கல்வி படிக்கும் மாணவர்கள் கல்வி கடன் பெறுவது தொடர்பான திட்ட விளக்க உரையாற்றினார். விழாவில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி உயர்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு 2.50 கோடி ரூபாய்க்கான கல்வி கடன் ஒப்படைப்பு அணைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், பேங்க் ஆப் இந்தியா, கனரா வங்கி, உள்ளிட்ட முன்னோடி வங்கி யின் மேலாளர்கள், பணியாளர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். விழுப்புரம் மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குனர் சிவ.நடராஜன் நன்றி கூறினார்.

# கலைப்பண்பாட்டுத்துறை விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

**புதுச்சேரி, நவ. 13–**

புதுச்சேரியில் கலைப் பண்பாட்டுத் துறை விருதுகளுக்கு விண்ணப்பிக்க எழுத்தாளர் களுக்கு இயக்குனர் கலிய பெருமாள் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, கலைப் பண்பாட்டுத்துறையில், 2023ம் ஆண்டுக்கான கம்பன் புகழ் இலக்கிய விருது, நேரு குழந்தைகள் விருது மற்றும் தொல்காப்பியர் விருது வழங்கப்பட உள்ளது. இதற்கு எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கவிதை, சிறுகதை, நாடகம், புதினம் மற்றும் கட்டுரை போன்ற துறைகளில் வெளியிடப்பட்ட சிறந்த, 10 படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு கம்பன் புகழ் இலக்கிய விருது வழங்கப்படுகிறது.

சிறுவர், சிறுமியர்களுக்கான அறிவியல், கலை, இலக்கியம், கலாச்சாரத்தை கற்பிக்கும் வகையில் உள்ள நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், பயண நூல், கட்டுரை தொகுப்பு போன்ற படைப்புகளில், இரண்டு சிறந்த சிறுவர் இலக்கிய படைப்புகள் தேர்வு செய்யப்பட்டு நேரு குழந்தைகள் இலக்கிய விருது மற்றும் தொல்காப்பியர் விருது வழங்கப்பட உள்ளது. இந்த விருதுகள் ஒவ்வொன்றிற்கும், ரூ.10 ஆயிரம் பண முடிப்பும், சான்றிதழும் வழங்கப்படும். கடந்த 2023ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியில் இருந்து டிசம்பர் 31ம் தேதி வரை வெளியிடப்பட்ட வெளியீடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை வரும், 25ம் தேதிக்குள் கலை பண்பாட்டுத் துறையில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது https://art.py.gov.in, என்ற இணையதளத்திலோ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம்




**சங்கரன்கோவில், நவ. 13–**

ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலை, பி.டெக் ஐ.டி. துறையில் பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் வேந்தர் முனைவர் கே.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. டீன்முனைவர் பி.தீபலட்சுமி சிறப்புரையாற்றினார். துறைத்தலைவர் முனைவர் எஸ். தனசேகரன் வரவேற்றார். 140 பெற்றோர்கள் வருகைதந்து, ஆசிரியர்களிடம், மாணவர்களின், குறை, நிறைகளை கலந்தாலோசித்தனர். பேராசிரியை எஸ்.ஹேமா சுவாதி நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பேராசிரியர் வி.சிவக்குமார் சிறப்பாக செய்திருந்தார்.

# மின் கட்டண உயர்வை குறைக்க கோரி மத்திய மின்துறை அமைச்சரிடம் நமச்சிவாயம் மனு



**புதுச்சேரி, நவ. 13–**

புதுச்சேரியில் மின்சார கட்டண உயர்வை குறைக்க கோரி மின்துறை அமைச்சர் நமச்சிவாயம், மத்திய அமைச்சர் மனோகர் லாலை சந்தித்து மனு அளித்தார்.

புதுடில்லியில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான மின்துறை அமைச்சர்கள் மாநாடு நடந்தது. மாநாட்டில் பங்கேற்ற புதுச்சேரி மின்துறை அமைச்சர் நமச்சிவாயம், புதுச்சேரியில் மின்துறை வளர்ச்சி மற்றும் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து பேசினார்.

தொடர்ந்து, புதுச்சேரியில் மின்சாரம் கொள்முதல் ஒப்பந்தம் செய்வதற்கான ஒதுக்கீட்டை குறைந்த கட்டண நிறுவனத்திடம் அளித்து மின்சார கட்டண உயர்வை குறைக்க கோரி மத்திய மின் துறை அமைச்சர் மனோகர் லாலை சந்தித்து மனு அளித்தார்.

# காரைக்கால் புதிய பஸ் நிலையத்தில் கழிவறைகளில் அதிக வசூல் செய்வதாக புகார்: கலெக்டர் மணிகண்டன் ஆய்வு



**காரைக்கால், நவ. 13–**

காரைக்கால் புதிய பஸ் நிலையத்தில் கட்டண கழி வறைகளில் பயணிகளிடம் அதிக வசூல் செய்வதாக வந்த புகாரைத் தொடர்ந்து கலெக்டர் மணிகண்டன் திடீராய்வு மேற்கொண்டார்.

காரைக்கால் புதிய பஸ் நிலையத்தில் உள்ள கட்டண கழிவறைகளில் பஸ் பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூல் செய் வதாக தொடர் புகார்கள், மாவட்ட கலெக்டருகு சென்றது. தொடர்ந்து, காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன், நேற்று திடீரென்று பஸ் நிலைய கட்டண கழி வறையை ஆய்வு செய்தார். அப்பொழுது அங்கு வருகின்ற பொதுமக்களிடம் ரூ.5க்கு பதிலாக கூடுதலாக ரூ.10 வசூலிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக, மாவட்ட கலெக்டர் மணிகண்டன், கூடுதல் கட்டணம் வசூலித்த கட்டண கழிவறை நடத்தும் நபரை எச்சரித்ததோடு, அந்த நபர் மீது, உரிய நடவடிக்கை எடுக்க, காரைக்கால் நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டார். இதனை பார்த்த பஸ்நிலைய பயணிகள் கலெக்டரை பாராட்டினர்.

# வலங்கைமானில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க 37ம் ஆண்டு நிறைவு விழா




**வலங்கைமான், நவ. 13–**

வலங்கைமானில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கம் 37ஆம் ஆண்டு நிறைவு விழா வட்ட சங்கத் தலைவர் நடராஜன் தலைமையில் நடைபெற்றது. பொருளாளர் சுந்தரம் வரவேற்றார். செயலாளர் பெருமாள் ஆண்டறிக்கை வாசித்தார். தணிக்கையாளர் தணிகாசலம் தீர்மானம் முன்மொழிந்தார். இந்த விழாவில் தமிழக அரசு தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி ஆகிய 70 வயது நிரம்பிய ஓய்வு பெற்ற அரசு அலுவலர்களுக்கு 10% ஊதிய உயர்வு வழங்கிட ஆணையிட வேண்டும் என்பது உள்ளிட்ட எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நாகை மண்டல தலைவர் ராஜகோபாலன், மாநில ஒழுங்கு நடவடிக்கை குழு தலைவர் கலியமூர்த்தி ஆகியோர் இயக்க பேருரை ஆற்றினர். மகளிர் அணி தலைவர் ஜோதிபாய் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். வட்ட பிரதிநிதி அய்யாசாமி நன்றி கூறினார்.

# மின்னணு முறை பயிர் சாகுபடி பரப்பு ஆய்வு



மதுரை, நவ. 13–

மத்திய அரசின் AGRISTACK திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் மின்னணு முறை பயிர்சாகுபடி பரப்பு ஆய்விற்கு மொபைல் அடிப்படையான செயலி உருவாக்கப்பட்டு பயிர் சாகுபடியின் அனைத்து தரவுகளும் பதிவேற்றும் பணியானது மாநிலம் முழுவதும் கடந்த 6ம் தேதி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 645 வருவாய் கிராமங்களில் உள்ள 16,61,624 சர்வே உட்பிரிவுகளையும் பதிவேற்றம் செய்வதற்கான பணி விரைந்து நடைபெற்று, கடந்த 6 நாட்களில் 7,32,582 சர்வே உட்பிரிவுகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

இப்பணியானது, வேளாண்மை தொழிற் படிப்பு பயிலும் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து வேளாண்துறை, தோட்டக்கலைதுறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை ஆகிய துறையைச் சார்ந்த அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

13 வட்டாரங்களைச் சேர்ந்த அனைத்து வருவாய் கிராமம் வாரியாக நடைபெறும் இக்கணக்கெடுப்பு பணிகளை துரிதப்படுத்திட தோட்டக்கலைத் துறையின் இயக்குநர் குமாரவேல் பாண்டியன், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், கரூர், அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டார். அவர் கள்ளிக்குடி அருகே உள்ள வில்லூர் கிராமத்தை ஆய்வு செய்து அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து இப்பணியை முடிக்குமாறு அறிவுரை வழங்கினார். மேலும், மதுரை மாவட்ட ஆட்சியருடன் பணியினை விரைந்து முடிப்பதற்கு கலந்தாலோசித்தார். வேளாண்மை இணை இயக்குநர், தோட்டக்கலை துணை இயக்குநர், மதுரை மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# கவுன்சிலர் ஜெயலட்சுமி சசிகுமார் இல்ல திருமண விழா




மதுரை பாண்டி கோவில் அருகே உள்ள தனியார் மஹாலில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் ஒன்றிய கவுன்சிலர் ஜெயலட்சுமி சசிகுமார் இல்ல திருமண விழாவில் மானாமதுரை நகராட்சி சேர்மன் மாரியப்பன்கென்னடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

# நாமக்கல் மாவட்டத்தில் ரூ.3.45 கோடி மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டல்

நாமக்கல், நவ. 13–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை சார்பில், நாமக்கல் மாவட்டம், வளப்பூர்நாடு, அறப்பளீஸ்வரர் சுவாமி கோயில், கூவைமலை, பழனியாண்டவர் கோயில் ஆகிய கோயில்களில் ரூ.3.45 கோடி மதிப்பீட்டிலான 2 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதனைத்தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பேளுக்குறிச்சி, கூவைமலை, பழனியாண்டவர் கோயிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா கலந்துகொண்டார்.



அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 2,268 கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர்களை பழுது பார்த்து வீதி உலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத்திட்டம் விரிவாக்கம், மலைத்திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றத்திலிருந்து இந்து சமய அறநிலையத்துறை வாயிலாக சீரிய முறையில் செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றபட்டு வருகின்றன.

அதனடிப்படையில் இன்றைய தினம் நாமக்கல்மாவட்டம், வளப்பூர்நாடு, அறப்பளீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் புதிய மூன்றுநிலை ராஜகோபுரம் அமைக்கும் பணி மற்றும் கூவைமலை, பழனியாண்டவர் திருக்கோயிலில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் சுற்று பிரகாரகல் மண்டபம் கட்டும் பணி என மொத்தம் 3.45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அட்மா குழுத்தலைவர் அசோக்குமார், இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் நந்தகுமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வாய்க்கால் தூர்வாரும் பணி



மதுரை, நவ. 13–

மதுரை மாநகராட்சி பந்தல்குடி வாய்க்கால் தூர்வாரும் பணிகளை மேயர் இந்திராணி பொன்வசந்த் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள், நீர்நிலைகள், கால்வாய்கள், ஊரணிகள், மழைநீர் வடிகால்கள் ஆகியவற்றில் தேங்கியுள்ள ஆகாயத்தாமரைகள், தேவையற்ற குப்பைகள், மண்துகள்கள், வளர்ந்துள்ள செடி கொடிகள் உள்ளிட்டவற்றை அகற்றி தூர்வாரும் பணிகள் மேற்கொண்டு மழைநீர் சீராக செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் மாநகராட்சியின் சார்பில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி செல்லூர் பந்தல்குடி வாய்க்காலில் மழைநீர் சீராக செல்வதற்கு தேங்கியுள்ள மண் படிவங்கள், பிளாஸ்டிக் குப்பைகள் உள்ளிட்டவற்றை அகற்றி தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மேயர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து குலமங்கலம் மெயின் சாலை பகுதியில் பாதாள சாக்கடை பராமரிப்பு பணிகள் மற்றும் செல்லூர் 60 அடி சாலை பகுதியில் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

செல்லூர் பந்தல்குடி வாய்க்கால் தூர்வாரும் பணியில் 9 ஹிட்டாட்சி வாகனங்கள், 2 ஜே.சி.பி.இயந்திரங்கள், 2 ரோபோ, 3 டிராஸ் லாரிகள், 3 டிப்பர் லாரிகள், 10 டிராக்டர்கள் உள்ளிட்ட பல்வேறு வாகனங்கள் மூலம் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின்போது மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி, தலைமை பொறியாளர் ரூபன்சுரேஷ், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி செயற்பொறியாளர் காமராஜ், உதவிப் பொறியாளர் (வாகனம்) ரிச்சார்டு, உதவிப் பொறியாளர்கள் பாண்டிகுமார், பிரேம் சங்கர், திருப்பதி, மாமன்ற உறுப்பினர் குமரவேல் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# வளர்ச்சித் திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு



சேலம், நவ. 13–

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியப்பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி செய்தியாளர் பயணத்தின்போது நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 3 ஆண்டுகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், கலைஞர் கனவு இல்லம், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பள்ளிகள் உட்கட்டமைப்புத் திட்டம், நபார்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.169.16 கோடி மதிப்பீட்டிலான 5,475 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 3,796 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,679 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.115.53 கோடி மதிப்பீட்டிலான 4,490 திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2,955 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,535 பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில், இன்றையதினம் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியம், வலசையூர் ஊராட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.10 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டு, பணிகளை தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சுக்கம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.16.20 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளையும், சுக்கம்பட்டி ஊராட்சியில் கிராமப்புற வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்றுவருவதை நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோன்று, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆச்சாங்குட்டப்பட்டி ஊராட்சிக்கு ரூ.27.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஊராட்சிமன்ற அலுவலகக்கட்டடப் பணியினையும், ஆச்சாங்குட்டப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் 100 மீட்டரில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுவரும் பணியினையும், வெள்ளாளகுண்டம் ஊராட்சிக்கு ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் நூலகக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளாளகுண்டம் ஊராட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.10 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வரும் பணிகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக குளம் அமைக்கும் பணிகள் என மொத்தம் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.87.70 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் 10 வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வாழப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை பொன்னாரம்பட்டி, துக்கியம்பாளையம் மற்றும் குறிச்சி ஊராட்சிகளில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டும் பணிகள், கிராமப்புற வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் பொன்னாரம்பட்டி ஊராட்சியில் ரூ.1.97 லட்சம் மதிப்பீட்டில் வீடுகள் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பொன்னாரம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.11.60 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக குளம் அமைக்கும் பணிகள், பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொன்னாரம்பட்டி மற்றும் பேளூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு தலா ரூ.32.80 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோன்று, நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.18.42 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிகள் என மொத்தம் வாழப்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.1.19 கோடி மதிப்பீட்டிலான வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணிகள் அனைத்தையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

# அரசின் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட்சி



சேலம், நவ. 13–

சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், மணிவிழுந்தான் ஊராட்சி மன்ற திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில், செய்திமக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கப் புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், மணிவிழுந்தான் ஊராட்சி மன்ற திடலில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறுபுகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சரால் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள், சுற்றுலாத்துறை அமைச்சர், பல்வேறு துறை சார்ந்த அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியினை ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● புதன் ● நவம்பர் 13, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை காணொலியில் திறந்து வைத்த முதல்வர்





**கடலூர், நவ. 13–**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமை செயலகத்திலிருந்து பண்ருட்டி மற்றும் மங்களூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை காணொலி காட்சிவாயிலாக திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. ராஜேந்திரன் முன்னிலையில் பண்ருட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாநிலம் முழுவதும் 17 இடங்களில் பல்வேறு மாவட்டங்களில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடங்களை காணொலி வாயிலாக திறந்து வைத்தார். இவற்றில் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி மற்றும் மங்களூர் ஆகிய 2 இடங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாயின் நிதியின்கீழ் ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் பண்ருட்டியிலும், ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் மங்களூரிலும் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்களில் தரைதளம் 763.60 சதுர அடியும், முதல்தளம் 763.60 சதுரஅடியும் மற்றும் வளாகம் 83.16 சதுரஅடியும் என மொத்தம் 1610.36 சதுர அடிபரப்பளவில் போதிய இடவசதிகளுடன் வட்டார ஊராட்சி பிரிவு, கிராம ஊராட்சி பிரிவு, பொறியியல் பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளுடன் கூட்டரங்கம், கழிவறை ஆகிய உட்கட்டமைப்பு மற்றும் காற்றோட்ட வசதியுடன் கூடிய கட்டடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடங்கள் குடிநீர் வசதிகள், மாற்றுத்திறனாளி களுக்கான சாய்தளவசதி, பொதுமக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில் சாலை வசதிகள் மற்றும் வாகன நிறுத்தம் உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பண்ருட்டி ஒன்றியக்குழு தலைவர் சபா.பாலமுருகன், பண்ருட்டி ஒன்றியக்குழு துணைத்தலைவர் எ.தேவகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) தேவராஜன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் உதவி இயக்குநர் ஊராட்சிகள் ஷபானா அஞ்சும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.கே.நாகராஜபூபதி, பண்ருட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், சக்தி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ்நாடு காவல்துறை சார்பில் போலீஸ் அக்கா திட்டம் தொடக்கம்






**நாமக்கல், நவ. 13–**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, விவேகானந்தா மகளிர் கல்லூரியில் மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில்குமார், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், காவல்துறை துணைத்தலைவர் (சேலம்சரகம்) உமா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ராஜேஸ்கண்ணன் ஆகியோர் முன்னிலையில், தமிழ்நாடு காவல்துறையின் சார்பில் போலீஸ் அக்கா (சகோதரி) திட்டத்தை தொடங்கி வைத்தார்.

மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில்குமார் தெரிவித்ததாவது, பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம், எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்றும காகவி பாரதியார் பாடியதற்கு ஏற்ப, தமிழ்நாடு முதலமைச்சர் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையிலும், பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு பல்வேறு பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

பெண்கள் தங்களின் பாதுகாப்பை உறுதிசெய்திடவும், தங்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சனைகள், சைபர் கிரைம் குற்றங்கள் குறித்தும், எவ்வித தயக்கமும் இன்றி காவல்துறையினரின் உதவி கோரும் வகையில் தற்போது போலீஸ் அக்கா திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். அதனடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திட 323 அரசு மற்றும் தனியார் பள்ளிகள், 99 கல்லூரிகளுக்கும் 136 பெண் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் நியமிக்கப்பட்டு போலீஸ் அக்கா (சகோதரி) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டணமில்லா தொலை பேசி எண்களாக பெண்கள் பாதுகாப்பிற்காக 1091, 181, பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக 1098 மற்றும் 1930 சைபர் குற்றங்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி எண்களை அறிவித்து 24 மணிநேரமும் செயல்படுத்தி வருகின்றார்கள்.

பெண்கள்கல்வியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இன்றைய நவீன உலகில் தங்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சனைகள், கவனசி தறல்கள், மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து தங்கள் குடும்பத்தில் தாய், தங்கையிடம் தெரிவிப்பது போன்று போலீஸ் அக்கா திட்டத்தில் காவல்துறையினரிடம் தெரிவித்து, எவ்வித பிரச்சனையிலிருந்தும் தங்களை பாதுகாத்துகொள்ள முடியும். தங்களின் பெயர் மற்றும் விபரங்கள் ரகசியமாக பாதுகாக்கப்படும். பெண்களுக்கு கல்வி எதற்கு என கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் ஔவையார், காக்கைபாடினியார், நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், பொன்முடியார் உள்ளிட்ட பல்வேறு பெண்கள் கல்வியில் சிறந்து புலமை பெற்றிருந்தனர்.

பெண்கள்கல்வி கற்றால் அந்த குடும்பம் மட்டுமின்றி அச்சமுதாயம் முன்னேறும். அந்நாடு முன்னேறும். எனவே, பெண்கள் தங்கள் கல்விக்கு தடையாக உள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வுகண்டு, தங்கள் திறமையையும், கல்வி தகுதியையும் உயர்த்திகொண்டு, தற்போது மேடையில் அமர்ந்துள்ள மாவட்ட ஆட்சியர், காவல்துறை துணைத்தலைவர் போன்று இச்சமுகத்தில் உயர்நிலையை அடையவேண்டும்.

மேலும், பெண்கள் பாதுகாப்பிற்காக வன்கொடுமை தடுப்புச்சட்டம், வரதட்சணை தடுப்புசட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்பு சட்டம், மூத்த குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையில் நாம்முன்னேற கல்வி முக்கியம் என்பதை கருத்தில் கொண்டு நன்கு கல்வி கற்று பிறருக்கு முன்னோடியாக திகழ வேண்டும் என மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில்குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, போலீஸ் அக்கா திட்டம்குறித்த சுவரொட்டிகளை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் செந்தில்குமார் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தர்மபுரி மண்டல கல்லூரி இணை இயக்குநர் டாக்டர்பி. சிந்தியா செல்வி, முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் காயத்திரி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சதீஷ்குமார், பள்ளி மற்றும் கல்லூரிகளின் ஒருங்கிணைப்பாளர்கள், காவல் ஆளிநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# நல்லாசிரியர் சுந்தரமூர்த்திக்கு 70-வது பிறந்தநாள், முனைவர் பட்டம் வழங்கும் விழா



**புதுச்சேரி, நவ. 13–**

புதுவை தமிழ் சங்கத்தில் நல்லாசிரியர் சுந்தரமூர்த்தி 70வது பிறந்தநாள் மற்றும் முனைவர் பட்டம் வழங்கும் விழா நடந்தது. கே.கே.சி அறக்கட்டளை நிறுவனர் ஜான்ராஜ் குமார் வரவேற்றார். முனைவர் ஏ.மு ராஜன் தலைமை தாங்கினார். முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். வழக்கறிஞர் கோவிந்தராசு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நல்லாசிரியர்கள் திலகவதி, வெற்றிவேல், குப்புசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் முத்து, நல்லாசிரியர் ஹேமாவதி, முன்னாள் சுற்றுலா துறை உதவி இயக்குனர் லட்சுமணன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை வழங்கினார். பேராசிரியர் அபர்ணா சுந்தரமூர்த்தி நன்றி கூறினார்.

# யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளை திறப்பு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் புதுப்பாளையம் பேரூராட்சியில் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் புதிய கிளை அலுவலகத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார்கள். அருகில் சென்னை மண்டல தலைவர் சத்யபன் பெஹரா, புதுப்பாளையம் ஒன்றியக்குழுத் தலைவர் சுந்தரபாண்டியன்.

# ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை காணொலியில் திறந்த முதல்வர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூரில் ரூ.366.12 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கருங்குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் குத்துவிளக்கேற்றினார்கள். அருகில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# ஜார்க்கண்ட் மாநில சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கியது

# தமிழகத்தை நெருங்கும் குறைந்த காற்றழுத்தம்

# மருத்துவமனையில் டாக்டருக்கு கத்திக்குத்து


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



• 13-11-2024 புதன்கிழமை •வெளியூர்: 14-11-2024 வியாழக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்